# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. சோழநாட்டில் பிறந்து சேரநாட்டில் காவியமானவள்

அ) கண்ணகி ☐ ஆ) மாதவி ☐
இ) மாதரி ☐ ஈ) சித்திராபதி ☐

2. புறச்சுட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) அவள் ☐ ஆ) இப்பெட்டி ☐
இ) உது ☐ ஈ) இவன் ☐

3. **ஈசன்** என்ற அடைமொழியால் போற்றப்பட்ட தமிழ் மன்னன்

அ) பாண்டியன் ☐ ஆ) எல்லாளன் ☐
இ) இராவணன் ☐ ஈ) குலோத்துங்கன் ☐

4. தாலாட்டுப் பாடலில் தாய் தன் பிள்ளைக்கு ஒப்பிட்டுப் பாடும் பழம்

அ) மாதுளம்பழம் ☐ ஆ) பலாப்பழம் ☐
இ) வாழைப்பழம் ☐ ஈ ) விளாம்பழம் ☐

5. முந்திரிகை உண்டான் என்பது

அ) தொழிலாகு பெயர் ☐ ஆ) சினையாகு பெயர் ☐
இ) பொருளாகுபெயர் ☐ ஈ) குணவாகுபெயர் ☐

6. ஒப்புயர்வற்ற இராவணகாவியம் ____________ தோன்றியது.

அ) 18 ஆம் நூற்றாண்டில் ☐
ஆ) 20 ஆம் நூற்றாண்டில் ☐
இ) 21 ஆம் நூற்றாண்டில் ☐
ஈ ) 19 ஆம் நூற்றாண்டில் ☐

7. யாழ்நூலகம் எரிந்த செய்தி கேட்டு உயிர் துறந்தவர்

அ) ஐசாக் தம்பையா ☐ ஆ) க.மு.செல்லப்பா ☐
இ) கே.நரசிம்மன் ☐ ஈ) தாவீது அடிகள் ☐

8. எண்ணெய் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ) எள் + நெய் ☐ ஆ) எள்ளு + நெய் ☐
இ) எண் + நெய் ☐ ஈ) எண் + ணெய் ☐

9. இலங்கையில் பண்டையச் சிற்றரசுகள் இருந்த இடங்களில் ஒன்று

அ) பெரிய புளியங்குளம் ☐ ஆ) ஆனையிறவு ☐
இ) கிளிநொச்சி ☐ ஈ) காங்கேசன்துறை ☐

10. குமரி, பஃறுளி ஆகிய ஆறுகள் ______________ வளம்பெருக்கின.

அ) குமரிக்கண்டத்தில் ☐
ஆ) ஆட்டிக் கண்டத்தில் ☐
இ) அமெரிக்கக் கண்டத்தில் ☐
ஈ) அந்தாட்டிக் கண்டத்தில் ☐

11. உருபு ஏற்கும் வேற்றுமைகள்

அ) 8 ☐ ஆ) 6 ☐
இ) 4 ☐ ஈ) 5 ☐

12. ஏழு நரம்புகளையுடைய வீணையின் இசையை __________ என்பர்.

அ) பண் ☐ ஆ) திறம் ☐
இ) அராகம் ☐ ஈ) தாளம் ☐

13. தனது பெயரைப் பல்லவர் போன்று மாற்றிக் கொண்ட இலங்கை மன்னன்

அ) புரிந்தகன் ☐ ஆ) குட்டபரிந்த ☐

இ) மானா ☐ ஈ) தாடிகன் ☐

14. **தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்** என்ற பழமொழியின் கருத்து

அ) குறையும் நிறையும் எங்கும் உண்டு ☐

ஆ) பணத்தின் வலிமை ☐

இ) ஏழ்மையின் வலிமை ☐

ஈ ) பழக்கத்தின் வலிமை ☐

15. இலங்கையில் சோழராட்சியின் போது புதிய தலைநகராக இருந்தது

அ) கந்தரோடை ☐ ஆ) அநுராதபுரம் ☐

இ) பொலநறுவ ☐ ஈ ) பூநகரி ☐

16. பாங்கியர் எனப்படுவோர்

அ) தோழியர் ☐ ஆ) துறவியர் ☐

இ) ஆய்ச்சியர் ☐ ஈ ) இடைச்சியர் ☐

17. **ஓடுமீன் ஓட உறுமீன் வரும் வரையும் வாடியிருக்குமாம் கொக்கு.** இதில் **உறு** என்பது

அ) பெயர்ச் சொல் ☐ ஆ) இடைச் சொல் ☐

இ) வினைச் சொல் ☐ ஈ) உரிச் சொல் ☐

18. குரவைக்கூத்து____________ நிலத்திற்குரிய கலை.

அ) முல்லை ☐ ஆ) பாலை ☐

இ) மருதம் ☐ ஈ ) நெய்தல் ☐

19. அறம் பொருள் இன்பம் என்பவை

அ) முப்பால் ☐ ஆ) முந்நீர் ☐

இ) முக்கனி ☐ ஈ) முத்தமிழ் ☐

20. கன்னங்கரேல் என்பது

அ) இரட்டைமொழி ☐ ஆ) அடுக்குமொழி ☐

இ) அடுக்கிடுக்குமொழி ☐ ஈ) இணைமொழி ☐

21. ஒருவர் இறக்கும் போது பாடப்படும் நாட்டார் பாடல்

அ) தாலாட்டுப்பாடல் ☐ ஆ) காதற்பாடல் ☐

இ) தொழிற்பாடல் ☐ ஈ) ஒப்பாரிப்பாடல் ☐

22. புதுக்கவிதை ______________ தோற்றம் பெற்றது.

அ) இருபதாம் நூற்றாண்டில் ☐

ஆ) பதினெட்டாம் நூற்றாண்டில் ☐

இ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் ☐

ஈ) பதினேழாம் நூற்றாண்டில் ☐

23. க்,ச்,ட் என்ற வல்லின மெய்யெழுத்துகளின் இனவெழுத்துகள்

அ) ங்,ய்,ண் ☐ ஆ) ண்,ஞ்,ந் ☐

இ) ங்,ஞ்,ண் ☐ ஈ) ங்,ண்,ம் ☐

24. சிலப்பதிகாரத்தில் **'சினையலர் வேம்பன்'** எனக் குறிப்பிடப்படுபவன்

அ) சோழன் ☐ ஆ) சேரன் ☐

இ) பல்லவன் ☐ ஈ) பாண்டியன் ☐

25. கண்ணகியால் எரியூட்டப்பட்ட நகரம்

அ) மதுரை ☐ ஆ) வஞ்சி ☐

இ) புகார் ☐ ஈ) பூம்புகார் ☐

26. இருமுது குரவர் எனப்படுவோர்

அ) பெற்றோர் ☐ ஆ) நண்பர் ☐

இ) அயலவர் ☐ ஈ) உறவினர் ☐

27. பின்வருவனவற்றுள் இடைத்தொடர்க் குற்றியலுகரம்

அ) பசு ☐ ஆ) வாழ்வு ☐

இ) மார்பு ☐ ஈ) எள்ளு ☐

28. **ஓங்கு புகழ் கற்கள்** என்ற கவிதையை எழுதியவர்

அ) உதயை வீரையன் ☐ ஆ) அம்பி ☐

இ) சாலை இளந்திரையன் ☐ ஈ) இரவி ☐

29. இணைமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நடுநடுங்கி ☐ ஆ) உள்ளும்புறமும் ☐

இ) பொலுபொலு ☐ ஈ) அடுக்கிஅடுக்கி ☐

30. நடக்கின்றன என்பதில் வந்துள்ள சாரியை

அ) நட ☐ ஆ) அ ☐

இ) அன் ☐ ஈ) கின்று ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

உலகில் முதன்முதலில் தோன்றிய மாந்தன் தமிழனே என்பது மாந்தவியல் ஆராய்ச்சியாளர்களின் கருத்து. குமரிக்கண்டத்தில் தோன்றிய தமிழினம் உலகமெல்லாம் பரவித் தன்புகழை நிலைநாட்டி வருகிறது. பன்னாடுகளுக்கும் வாழச் சென்ற தமிழர் தம் வாழ்க்கை பற்றிய சிந்தனை மட்டுமல்லாமல் தாய்மொழி தமிழை வளர்க்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருவது அவர்களது மொழிப்பற்றைக் காட்டுகிறது. வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் போன்ற ஊடகங்கள் உலகத் தமிழரை இணைக்கும் பாலங்களாகத் திகழ்கின்றன. அவை மொழியைக் காக்கவும் மேம்படச் செய்யவும் பேருதவி புரிகின்றன. தமிழர் பல்வேறு காரணங்களுக்காகப் புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்தாலும் தம் தாயகத்தை மறவாமல் இருக்கின்றனர். தாயகத்தில் எம்மக்களால் பேணப்படும் வளங்களைத் தாம் வாழும் நாடுகளுக்குக் கொண்டு வருகின்றனர். தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவற்கொரு குணமுண்டு என்பதற்கிணங்க உலகெங்கும் வாழும் தமிழர்கள் தங்களது பண்பாட்டு அடையாளங்களை மறவாமலும் மாற்றிக் கொள்ளாமலும் வாழ்கின்றனர். கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பொன்மொழியை மெய்ப்பிக்கும் வண்ணம் இன்றும் தமிழர் உலகெங்கும் வாழ்ந்து வருகின்றனர்.

1. மாந்தவியல் ஆராய்ச்சியாளரின் கருத்து என்ன?

2. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் எவற்றைத் தாம் வாழும் நாடுகளுக்குக் கொண்டு வருகின்றனர்?

3. உலகத் தமிழரை இணைக்கும் பாலங்களாகத் திகழ்பவை எவை?

4. "**யாதும் ஊரே யாவரும் கேளிர்**" என்று கூறியவர் யார்?

5. தமிழ் ஊடகங்கள் எவ்வகையில் தமிழருக்கு உதவி புரிகின்றன?

புள்ளிகள் 10

3) **பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்..." எனத் தொடங்கும் மங்கல வாழ்த்தினைக் கொண்ட காப்பியம் எது? யாரால் எழுதப்பட்டது?

2. கரிகாற்சோழ மன்னன் எக்காலத்து மன்னன்? அவன் சிங்களவரைச் சிறைப்பிடித்து அணைகட்டுவித்த ஆற்றின் பெயர் என்ன?

3. நாட்டார் பாடல்களுக்கு வழங்கப்படும் பெயர்களில் இரண்டினைத் தருக.


4. தமிழர் பகுதிகளில் இலவய நூலகம் முதன்முதலில் யாரால் தொடங்கப்பட்டது?

5. முள்வேலி பயிரைக் காப்பது போல் மக்களைக் காத்த மன்னன் யார்? அவனது தந்தையின் பெயர் என்ன?

6. யாழ்நூலகம் எத்தனையாம் ஆண்டு எரியூட்டப்பட்டது ?

புள்ளிகள் 10

7. தரப்பட்டுள்ள ( ஈழம் ) வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களின் பெயர்களை எழுதுக.




அ) ______________________

ஆ) ______________________

இ) ______________________

ஈ) ______________________

4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.



கண்மூடித் தூங்கும் மாவீரரே- உங்கள்
கனவு எங்கள் கைகளிலே

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வினையடிகளின் தன்வினை, பிறவினைகளைத் தருக.

| வினையடி | தன்வினை | பிறவினை |
|---|---|---|
| எழுது | | |
| உண் | | |
| பாடு | | |

2. பின்வரும் வேற்றுமைகளின் பொருள் விளங்க ஒவ்வொரு சொல்லியம் தருக.

ஐந்தாம் வேற்றுமை ________________________________

ஏழாம் வேற்றுமை ________________________________

3. சொற்பொருள் தருக.

மங்குல் ______________ நடவு ______________

வீறு ______________ முடுக்கு ______________

தேராது ______________ ஏனம் ______________

4. பின்வருவன எவ்வகைத் தொகைகள்

ஓடுநீர் ____________________

மலைத்தோள் ____________________

இரண்டேகால் ____________________

5. பின்வரும் சொல்லிய வகைகளுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

கூற்றுச் சொல்லியம் ________________________________

கலப்புச் சொல்லியம் ________________________________

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

முயற்சி உடையவரே முன்னேறுவர். முயற்சி உடையவரே புகழ்பெறுவர்; மதிப்புறுவர்; மகிழ்ச்சி அடைவர். ஒரு செயலைத் தொடங்கின் இடைவிடாது முயலுங்கள். இடையிடையே தோன்றும் இன்னல்களைக் கண்டு மருளாதீர்கள். மருண்டவர் தோற்றவரே! கடல் திரண்டு வரினும் அஞ்சாது செயலை ஆற்றுங்கள். எண்ணிய செயலில் கண்ணாயிருங்கள். சிறியரின் நகைமொழிக்கு செவி சாய்க்காதீர்கள். நண்பர் பகையானமைக்குத் துன்புறாதீர்கள். வெற்றி கையில் உற்றபோது வேந்தரும் உம்மை விருந்துக்கு அழைப்பர். நம் முன்னோர் எவ்வாறு கல்வியில் வீரத்தில் கடமையில் சிறப்புற்றார்கள்? இன்று மேனாட்டார் மதிப்படைந்தமை எதனால்? எண்ணிப் பாருங்கள். கட்டை வண்டியில் தொடங்கிய போக்குவரத்து காற்று வேகத்தில் நாற்றிசையும் செல்கிறது பாலை நிலத்தைச் சோலைநிலமாக்கவும் இருந்த இடத்திலிருந்து பெருந்தொலைவிலுள்ள பேச்சைக் கேட்கவும் இன்றைய மாந்தனால் முடியும் என்றால், இந்த ஆற்றல் எவ்வாறு கிடைத்தது? சோம்பி இருந்து தூங்கி மடியாமல் முழு மாந்தனாக முயலுங்கள். விடாது முயலுங்கள். மாந்தனுக்குள்ளே மாண்புமிக்க ஆற்றல் உள்ளது. அதை முயற்சியினாலேயே வெளிப்படுத்த வேண்டும்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இராவணனது சிறப்பியல்புகளும் அவனது ஆட்சியும

- **முள்ளிவாய்க்காலும் ஈழப்போரும்**

  முள்ளிவாய்க்கால் அமைவிடம்.

  போரின் கரணியம்.

  போர் அறங்கள் மீறப்பட்டமை.

  உலக நாடுகளின் பங்கும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும்

- **வறுமையின் கொடுமை**

  வறுமை என்றால் என்ன ?

  வறுமையின் கரணியம் ( தொழில்வாய்ப்பு இன்மை, போர், இடப்பெயர்வு, இயற்கைப் பேரழிவு )

  இளமையில் வறுமையும் அதன் கொடுமையும்

  வறுமையைப் போக்கும் வழிகள்.

புள்ளிகள் 20